# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

OS. No. 137/2015 Date: 12.08.2024

PW2–சந்திரா

சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

தாவா பரிகாரம் பற்றி தெரியும். என் தாயார் 1ம் வாதி இறந்துவிட்டதால் எங்களை வாரிசாக சேர்த்துள்ளோம். தாவா சொத்தின் விஸ்தீரணம் 3.5 ஏக்கர். அச்சொத்துக்கள் அனைத்தும் என் தாத்தா உயிருடன் இருக்கும் போதே பாகபிரிவினை செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அந்த வாய்மொழி பாகத்தின் படி தாவா சொத்தின் கிழபுற பாகத்தை 2ம் பிரதிவாதிக்கும் நடுபாகம் 1ம் பிரதிவாதிக்கும் மேல்புற பாகம் என் பாட்டிக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதன் படி தான் தாவா சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 1ம் பிரதிவாதி அட்டை வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்தில் ஒரு ஓட்டு வீடும் ஒரு அட்டை வீடும் உள்ளது. அட்டை வீட்டில் 1ம் பிரதிவாதி ஓட்டு வீட்டில் 1ம் பிரதிவாதியின் மருமகன் நாகராஜும் குடியிருந்து வருகிறார்கள். அந்த வீடுகள் தாவா சொத்தின் நடுபாகத்தில் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் எந்த திசையில் உள்ளது என்றும் எனக்கு தெரியாது. அந்த வீடுகளுக்கு 1ம் பிரதிவாதி மின் கட்டணம் செலுத்தி வருகிறார். தாவா சொத்தில் நாங்கள் கூட்டு சுவாதீனத்தில் உள்ளோம் என்பதை காட்ட பட்டா தாக்கல் செய்துள்ளேன். நாங்கள் கிணற்றை அனுபவிப்பதற்கும் ஆதாரம் தாக்கல் செய்துள்ளோம் என்று நான் வழக்குக்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் மதிப்பு தெரியாது. தாவா சொத்தை நாங்கள் குறைவாக மதிப்பிட்டுள்ளோம் என்பதால் தாவா நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. நாங்கள் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணமும் தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எங்களுக்கு எந்த உரிமையும் பங்கும் இல்லை என்றாலும் பிரதிவாதிகள்

தான் வாய்மொழி பாகம் படி அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா செலவு தொகையுடன் தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

நான் குறிப்பிட்ட நாகராஜ் யாருடைய மகன் என்றால் 3 ம் வாதி நாகம்மாளின் மகன்.

Sd/-சந்திரா

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.